**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 173 of 2024

DATE : 05.08.2025

Depositions of witness for Prosecution

PW: 8

| | | | |
|---|---|---|---|
| Name | மாரிச்சாமி | Caste | |
| Father/Husband's Name | சங்கையா கோனார் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of August 2025

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை : –**

1) நான் கரிசல்குளத்தில் வசித்து வருகிறேன். நான் ஹோட்டல் வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 06.11.2022 அன்று எனது தம்பி செந்தில் குமார் என்பவரின் சுமோ நான்கு சக்கர வாகனத்தை அவருடைய டீக்கடை அருகில் நிறுத்தி வைத்திருந்ததை காணவில்லை. 07.11.2022 அன்று இது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். காவல்துறை விசாரணையில் சிசிடிவி பதிவுகளை பார்த்ததில் எனது தம்பி நான்கு சக்கர வாகனத்தை ஒரு நபர் திருடி தேடி சென்ற விபரம் தெரியவந்தது. அதன் பின்பு மதுரை சிந்தாமணி சுங்கச்சாவடியில் உள்ள சிசிடிவி பதிவுகளை பார்த்தபோது, திருடி சென்ற வண்டிக்கு பின்புறம் இருசக்கர வாகனத்தில் சென்று ஒரு நபர் சுங்கச்சாவடியில் இரு சக்கர வாகனத்தை நிறுத்தி சுமோவில் ஏறிச் சென்ற விவரம் தெரியவந்தது. போலீசார் சுங்கச்சாவடியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இருசக்கர வாகனத்தை கண்காணித்தார்கள். 09.11.2022 அன்று மேற்படி இருசக்கர வாகனத்தினை எடுக்க வந்த நபரை காவல்துறையினர் பிடித்து விசாரணை செய்தார்கள். அதன் அவர்களை விசாரணை செய்யும் பொழுது ஒரு நபர் பெயர் பால் டேனி, மற்றொரு

நபர் பெயர் சங்கர். மேற்படி இரண்டு நபர்களையும் எங்கள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் நாங்கள் இருசக்கர வாகனத்தினை திருடியதாக ஒப்பு கொண்டார்கள். திருடி சென்ற வாகனத்தினை சென்னையைச் சேர்ந்த மோகன் பாபுவிடம் விற்பனை செய்து விட்டதாக சொன்னார்கள். அதன் பின்பு வாகனத்தை மீட்பதற்காக சென்னை சென்று மோகன் பாபுவிடம் விற்பனைக்காக வைத்திருந்த இடத்திற்கு சென்று எங்கள் முன்னிலையில் விசாரணை செய்த பொழுது அவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். மேற்படி மோகன் பாபு அவர்தான் வாகனத்தை வாங்கியதாக ஒப்புக்கொண்டார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், திருப்பதி என்பவரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். சம்பவம் இடத்தில் வைத்து சுமோவை போலீசார்கள் அத்தாட்சி மூலம் கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சியில் நானும், திருப்பதி என்பவரும் கையெழுத்து செய்தோம். மறுநாள் 10.11.2022 அன்று எதிரிகள் மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்தோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

நான் எங்கே குடியிருந்து வருகிறேன் என்றால் அயன் கரிசல்குளத்தில் குடியிருந்து வருகிறேன். சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் இடத்திற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 2 கிலோமீட்டர் தூரம் இருக்கும். அ.சா.1 எனக்கு என்ன உறவு முறை என்றால் தம்பி ஆவார். அத்தாட்சியில் என்னுடன் கையெழுத்து செய்ததாக சொல்லும் திருப்பதி எனக்கு என்ன உறவு முறை என்றால் அவரும் எனக்கு தம்பி முறை ஆவார். புகார் மனு சம்பந்தமாக எனக்கு என்ன தெரியும் என்றால் எனது தம்பியின் வாகனம் காணாமல் போனது என்று கேள்விப்பட்டேன். வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு சென்று பார்த்த பொழுது அங்கே கண்ணாடி துகள்கள் உடைந்து காணப்பட்டது. மேற்படி வாகனத்தின் வண்ணம் மற்றும் பதிவு எண் தெரியுமா என்றால் சிகப்பு கலர் வாகனம் அதன் பதிவு எண் TN 59 AD 7038. சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் நாள் மற்றும் தேதி தெரியுமா என்றால் இரவு வாகனத்தை திருடி சென்று விட்டார்கள். காலை 7 மணிக்கு தான் எங்களுக்கு விஷயம் தெரியும். சம்பவத்தை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாகனத்தை எந்த பக்கமாக எனது தம்பி நிறுத்தி வைத்திருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெற்கு பக்கம் பார்த்து வாகனத்தை நிறுத்தி வைத்திருந்தார். வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்தை நான் எப்போது சென்று பார்த்தேன் என்றால் காலை 7 மணிக்கு. சம்பவ இடத்தில் உடைந்த கண்ணாடி துகள்களைத் தவிர வேறு ஏதேனும் நான் பார்த்தேனா என்றால் கண்ணாடி மட்டும் தான் உடைந்த நிலையில் கிடந்தது. எந்த பக்கம் கண்ணாடி உடைக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் இடது பக்க கண்ணாடி உடைக்கப்பட்டிருந்தது. இடது பக்கம் முன்னால் உள்ள கதவு கண்ணாடியா

அல்லது பின்னால் உள்ள கதவு கண்ணாடி என்றால் பின்னால் உள்ள கதவு கண்ணாடி. அ.சா.1 தன்னுடைய விசாரணையில் சிசிடிவி பதிவுகளை பார்த்த பொழுது அதில் காட்சிகள் தெளிவாக இல்லை என்று சொல்லி உள்ளார் என்றால் சரியல்ல தெளிவாக தெரிந்தது. காணாமல் போன வாகனத்தை கண்டுபிடிப்பதற்காக மற்றொரு நான்கு சக்கர வாகனத்தில் வாடகைக்கு எடுத்துக்கொண்டு சென்னை சென்றோம் என்றால் சரிதான். சிசிடிவி பதிவு காட்சிகளை எப்போது பார்த்தேன் என்றால் 07.11.2022. சிசிடிவி காட்சியில் நான் எந்த எதிரியை பார்த்தேன் என்றால் எதிரி சங்கரா என்று எனக்கு சரியாக தெரியவில்லை. ஆனால் ஒரு நபரை பார்த்தேன். அவர் இருசக்கர வாகனத்தினை நிறுத்திவிட்டு திருடு செய்த நான்கு சக்கர வாகனத்தில் ஏறி சென்றதை நான் பார்த்தேன். நாங்கள் சென்னைக்கு செல்ல வாடகைக்கு வாகனத்தை எடுத்து சென்றோம் என்றால் சரிதான். அந்த வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் யார் என்றும், திருடு போனதாக சொல்லும் நான்கு சக்கர வாகனத்தை ஓட்டிய நபர் யார் என்ற விபரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகார்தாரா் எனக்கு தம்பி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. போலீசார்கள் என்னிடம் கையெழுத்து வாங்கிய பேப்பர் தட்டச்சு செய்து காவல் நிலையத்தில் வைத்துதான் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். சென்னைக்கு என்னுடன் யாரெல்லாம் வந்தார்கள் என்றால் எனது தம்பி திருப்பதியும் காவல்துறை அதிகாரிகளும் வந்தார்கள். எந்த தேதியில் எத்தனை மணிக்கு சென்னைக்கு சென்று மோகன் பாபுவை விசாரித்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. சென்னையில் இருந்து எப்போது ஊருக்கு திரும்பினோம் என்றால் மறுநாள். இந்த வழக்கில் புகார்தாரர் எனக்கு தம்பி என்கின்ற முறையில் நானும் திருப்பதி உடன் பிறந்தவர்கள் என்கின்ற முறையிலும் இந்த வழக்கின் புகார்தாரருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்க்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு